**வலிகாமம் மேற்கு பிரதேச சபை**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 28 ஆம் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 2020 யூன் 29 ஆம் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 ஆகஸ்ட் 31 ஆம் திகதியும் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து வலிகாமம் மேற்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இன் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனிவரும் காலங்களில் வெளிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களை தயாரித்து அளிப்பதற்கான கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களில் எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | ரூபா 885,000 ஆன வாராந்த சந்தை கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சபைக்கு பராதீனப்படுத்தியதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | சந்தை கட்டிடங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 07 மயானங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் காணி கட்டடங்களின் பெறுமதி குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | சபைக்கு பராதீனப்படுத்தியதும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படும். | 07 மயானங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (iii) | 05 வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்காமையினால் மோட்டார் வாகனங்களின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகளில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 05 மோட்டார் வாகனங்களின் பெறுமதியினை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**1.4 இணக்கமின்மைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டின் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டம் | | | |
| உப பிரிவு 16(2) | வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிக்கூற்றுக்களுடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்திற்கமைய வருடாந்த செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்பிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| பிரிவு 158 (1) | ஆதனவரி நிலுவை ரூபா 13,809,422 செலுத்தத் தவறியோருக்கு பற்றாணைச்சீட்டு வழங்கப்பட்டிருக்கவில்லை. | பற்றாணைச்சீட்டு வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள் | | | |
| இலக்கம் 571 | காலங்கடந்த வைப்புக்கள் ரூபா 1,583,999 இனை தீர்வு செய்வதற்கு எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய விதிகளுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | | | |
| (i) 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 05/2018 (1) | பொதுமக்கள் சேவைப்பட்டயம் தயாரிக்கப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | திருத்தி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 2018.01.24 ஆம் திகதிய இலக்கம் 02/2018 | இயலளவு விருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது தொடர்பான மனிதவளத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் பணியாளர்களிற்கு ஓராண்டுக்கு ஆகக்குறைந்தது 12 மணித்தியாலங்களுக்கு குறையாத பயிற்சி வழங்கப்பட்டமையினையும் உறுதிப்படுத்தப்பட முடியாதுள்ளது. | நடப்பாண்டில் மனித வளத்திட்டம் தயாரிக்கப்பட்டு பயிற்சிகள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (உ) அரச நிர்வாக சுற்றறிக்கை | | | |
| 26 யூன் 2008 இன் 13/2008 ஆம் இலக்கம் | நாளாந்த வாகன ஓட்ட அட்டவணைகள் தொடர்ந்து வரும் மாதத்தின் 15 ஆம் திகதிக்கு முன்பாக கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்விற்குச் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய வாகன ஓட்ட அட்டவணைகள் சமர்ப்பிப்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

(ஊ) ஏனைய சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| 2018.07.19 ஆம் திகதிய 2018/e உள்ளூராட்சி - 01 ஆம் இலக்க உள்ளூராட்சி சுற்றுநிருபம் | பிரசைகளுக்கு இணையத்தின் மூலமாக சேவைகளை பெறுவதற்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவில்லை. | சேவைகள் ஏற்படுத்திக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கைக்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,660,931 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 74,743,374 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | 2018 | | |
|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 9,392,873 | 9,551,813 | 13,809,422 | 9,339,672 | 9,455,490 | 9,945,885 |
| வாடகைகள் | 14,292,550 | 15,676,220 | 21,507 | 11,253,600 | 52,024,138 | 11,733 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,951,250 | 1,967,160 | 10,500 | 1,852,500 | 2,006,506 | 24,000 |
| ஏனைய வருமானம் | 68,676,510 | 61,686,691 | 10,577,523 | 67,434,237 | 80,453,581 | 32,799,789 |
| | 94,313,182 | 88,881,884 | 24,418,952 | 89,880,009 | 143,939,715 | 42,781,407 |

**2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 143,939,715 ஆக இருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 88,881,884 ஆக காணப்படுகின்றதுடன் 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2019 ஆம் ஆண்டில் வருமான சேகரிப்பின் செயலாற்றல் ரூபா 55,057,831 இனால் குறைவடைந்துள்ளமை அவதானிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் காலங்களில் வருமானம் பட்டியலிடப்பட்டு அறவிடுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான சேகரிப்பின் செயலாற்றலை அதிகரிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 6 வருடங்களாக வருமானம் பட்டியலிடப்பட்டிருக்காமையானது வருமான சேகரிப்பின் வினைத்திறனின்மையை வெளிப்படுத்துகின்றது. | எதிர்வரும் காலங்களில் வருமானம் பட்டியலிடப்பட்டு வெளிப்படுத்தப்படும். | வருமானத்தினை பட்டியல்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் |

**2.2.3 வீதவரி மற்றும் வரி**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | வீதவரி நிலுவை ரூபா 13,809,422 இனை அறவிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவீட்டை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வீதவரி நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தண்ணீர்வரி நிலுவை ரூபா 302,665 இனை அறவிட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தண்ணீர்வரி நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**2.2.4 வாடகை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வாடகை நிலுவை ரூபா 21,507 இனை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வாடகை நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| வியாபார அனுமதிப்பத்திரங்களிற்கான நிலுவை ரூபா 10,500 இனை அறவிட நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | வியாபார அனுமதிப்பத்திரங்களிற்கான நிலுவையினை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

### 2.2.6 நீதிமன்ற தண்டப்பணம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மாகாண சபையின் பிரதம செயலாளர் மற்றும் அனைத்து அதிகாரிகளிடமிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 1,321,786 பெறப்பட வேண்டியிருந்தது. | மாகாண திறைசேரிக்கு கடிதம் அனுப்பி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நீதிமன்ற தண்டப்பணங்களை அறவிடுவதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் 06 விடயங்களுக்கு மாத்திரம் உபவிதிகள் உருவாக்கப்பட்டிருந்தது. | வர்த்தகமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்திற்கமைய உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய 30 செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டு முதல் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | உபவிதிக்கமைய வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**(இ) செயற்பாடுகளின் செயலாற்றலில் தாமதங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 வேலைத்திட்டங்கள் குறிப்பிட்ட காலத்தில் நிறைவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டிருந்தது. | வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. | வேலைத்திட்டங்கள் உரிய காலத்தினுள் முடிவுறுத்துதல் வேண்டும். |

**(ஈ) திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (i) | சுகாதாரத் தொழிலாளர்களுக்கு மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வைத்திய அதிகாரிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | சுகாதாரத் தொழிலாளர்களுக்கான மருத்துவ பரிசோதனைகள் உரிய காலத்தினுள் மேற்கொள்ள வேண்டும். |
| (ii) | தேசிய கொள்கைகளின்படி திண்மக்கழிவுகள் தரம் பிரிக்காமல் சேகரிக்கப்படுவதுடன் தீ முட்டி எரிக்கப்படுகின்றமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன், கழிவுகள் நறுக்கப்பட்டு மண்தட்டு இடப்பட்டு மூடப்பட்டிருக்கவில்லை. | உரிய நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெற்றதும் கழிவுகள் தரம் பிரிக்கப்படும். | திண்மக் கழிவு முகாமைத்துவத்திற்கு அமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

(உ) சுற்றுச்சூழல் பிரச்சினைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| திண்மக்கழிவுகள் அகற்றுவதற்காக தெரிவு செய்யப்பட்டிருந்த பிரதேசத்தில் கொசு எண்ணெய் அடித்தல் மற்றும் துர்நாற்றத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நடப்பாண்டில் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கமைய உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| (அ) | பிரதேச சபையின் உரிய நோக்கங்களுக்குப் பயன்படுத்தாமல் ரூபா 90,842,387 நிதியினை நிலையான வைப்பாக பேணப்பட்டுள்ளது. | நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | பிரதேச சபை நிதியினை அபிவிருத்தித் திட்ட வேலைகளை நடைமுறைப்படுத்த பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தவேலை தொடர்பான முற்பணங்கள் ரூபா 2,615,065 பெற்றுக்கொள்ளப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கோரிக்கை கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. | முற்பணங்கள் உரிய காலத்தில் தீர்வு செய்யப்படல் வேண்டும். |
| (இ) | உளளுராட்சி உதவியாளரினால் தயாரிக்கப்பட வேண்டிய அறிக்கைகள் தயாரிக்கப்படாமையினால் முக்கிய பணிகள் நிறைவேற்றப்படாமல் உள்ளது. | அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும | உரிய அறிக்கைகள் உரிய காலத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | பொதுமக்கள் சேவை பட்டயத்தினை காட்சிப்படுத்தியுள்ள போதும் மக்களுக்கு வழங்கப்பட்ட சேவைகள்யாவும் காலம் தாழ்த்தியே வழங்கப்பட்டிருந்தன. | உரிய காலங்களில் சேவை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய காலத்தில் மக்களுக்குக் சேவைகள் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 20 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டிருந்தது. | நேர்முகப்பரீட்சை நடாத்தப்பட்டு வெற்றிடங்கள் பூரணப்படுத்தப்படும். | உரிய காலத்தில் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் 19,080 ஆதன உரிமையாளர்களுக்கு K படிவம் விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை | நடப்பாணடில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்திற்கமைய K படிவம் விநியோகிக்க உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஊழியர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 929,091 ஆன 34 கொடுப்பனவுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரியவர்களுக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஊழியர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.5.1 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ரூபா 22,355,483 ஆன 47 ஆதனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை | சபைத்தீர்மானம் பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | ஆதனங்களின் உரிமையை சபையின் பெயருக்குக் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 06 வாகனங்கள் சபையின் பெயருக்கு உரிமை மாற்றப்பட்டிருக்கவில்லை. | ஆவணங்கள் கிடைக்கப்பெறாமையினால் உரிமைமாற்றம் செய்யமுடியாது உள்ளது. | வாகனங்களின் உரிமையை சபையின் பெயருக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.5.2 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 252 - 6540 இலக்க பிக்கப் வாகனமும் WPHO - 0557 இலக்க இழுவை நீர்த்தாங்கியும் 05 தொடக்கம் 17 வருடங்களாக பயன்படுத்தப்படாதுள்ளது. | உரிமை மாற்றம் செய்யப்படாமையினால் தொடர் நடவடிக்கை எடுக்கப்படாதுள்ளது. | வாகனங்களினை பயன்படுத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீண்டுவரும் செலவினங்களினது பாதீட்டு செலவினத்திற்கும் உண்மை செலவினத்திற்கும் இடையே கணிசத்தன்மையான வேறுபாடுகள் காணப்படுவது பாதீட்டின் குறைபாடாக உள்ளது. | இனிவரும் காலங்களில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | பாதீட்டினை சரியான முறையில் திட்டமிடல் வேண்டும். |